[8th September 1958

Sri R. KRISHNASAMI NAIDU : ராமநாதபுரம் ஜில்லா, ராமநாதபுரம் தாலூகாவில் மண்டபப் பகுதிகளில் உள்ள காடுகளில் இத்தகைய குதிரைகள் இருக்கின்றன. அவைகளையும் அபிவிருத்தி செய்ய ஏதாவது திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி குதிரைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஒன்றும் இப்பொழுது அரசாங்கத்தினிடம் இல்லை. முதலில் வேதாரண்யத்தில் உள்ள கொடிக்காட்டில் உள்ளதை என்ன செய்யலாம் என்பதை பரிசீலனை செய்து அங்கு ஏதாவது செய்யலாமா என்று பார்த்த பிறகுதான் மீதியுள்ளவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

Sri A. A. RASHEED : Sir, is there any proposal to start horse racing in Tanjore district to breed horses?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : These are ponies. These are not fit for races.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, குதிரை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஒருவிதமான திட்டமும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால், குதிரைப் பந்தயத்தை நடத்துவதால் குதிரைகளை அபிவிருத்தி பண்ணுவதாக ஆகாதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : குதிரைப் பந்தயத்தில் உபயோகப்படும் குதிரைகளை ராணுவத்திற்கு பயன்படுத்த அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

Fertilizers.

*100-BB *Q.*—**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Home be pleased to place a statement on the Table of the House as to the demand and supply position of fertilizers in the State for the year 1958–59 and the steps taken by the Government to keep up agricultural production from the point of view of proper manuring of agricultural lands?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

Libraries

*100-CC *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) சென்னை ராஜ்ய இந்துமத அறநிலைய போர்டின் ஆதிக்கத்திலிருக்கும் எத்தனை கோவில்களிலும், தர்ம ஸ்தாபனங்களிலும் இலவச வாசகசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) மேற்கண்ட இலவச வாசகசாலைகளுக்கு ஜில்லா லைப்ரரி அத்தாரிடி மூலம் உபகாரத் தொகை கொடுக்கப்பட்டு வருகின்றனவா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Ninety-one temples and five maths.

(*b*) No, Sir.

Sri P. G. MANICKAM : ஸார், இந்த கோவில்களில் இருக்கும் வாசக சாலைகளின் அபிவிருத்திக்காக லைப்ரரி அத்தாரிட்டிகளிடமிருந்து உதவி பெறுவதற்கு அரசாங்கம் ஒரு முறையை ஏற்படுத்துமா ?

---

[a] Printed as Appendix I on pages 383–384 infra.